DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO.125/2022

Deposition of Lw1 examined as Pw1 Dt. 03.03.2026

| | |
|---|---|
| Name | ஜெயராமன் |
| Father's Name | தங்கவேல் |
| Village | மயிலாடுதுறை |
| Age | 72/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 03.03.26

( A1 to A5 Present)

**முதல் விசாரணை**

நான் ஏவிசி கலை கல்லூரியில் வரலாற்றுத்துறை பேராசிரியராக பணிபுரிந்து 2012 ம் ஆண்டு ஓய்வு பெற்று தற்சமயம் மீத்தேன் திட்ட எதிர்ப்பு கூட்டமைப்பின் தலைவராக உள்ளேன். எனது தலைமையில் நான் ஒருங்கிணைப்பாளராக மேற்படி கூட்டமைப்பில் இருந்து காவிரி படுகைகள் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக மாற்றும் படி கோரி போராட்டங்கள் நடத்தி 2020 ல் அதற்கான சட்டத்தை பெற்றோம். நான் அரசியல், அறிவியல் மற்றும் வரலாற்று துறை பேராசிரியர் என்ற முறையில் சிக்கலான அரசியல் கருத்தாங்களுக்கு விளக்கம் கோரி பல்வேறு அமைப்புகள் என்னை அழைப்பார்கள். அதன்படியே என்னை 2021 ம் ஆண்டில் தமிழ் தேசியம் குறித்து பேசுவதற்கு சென்னையில் தமிழ் தேசம் நடுவம் என்ற அமைப்பு என்னை அழைத்திருந்தது. நான் தமிழ் தேசிய குறித்து PHD பெற்றிருந்ததால் என்னை அழைத்திருந்தார்கள். நான் மேற்படி அமைப்பில் ஆற்றிய உரை சிறந்த கண்ணியமான உரை. நான் ஆற்றிய உரையானது இணையத்தில் உள்ளது, அதை தற்பொழுதும் பார்க்கலாம். நான் மேற்படி ஆற்றிய உரையில் தமிழ் தேசியம் என்பது விடுதலை கருத்தியல், ஒரு மாநிலத்திற்கு முதலமைச்சர் ஆவதல்ல என்று பேசி இருந்தேன். இந்த உரையானது தங்களது அரசியலை பாதிக்கிறது என்று நாம் தமிழர் கட்சி காரர்கள் சேர்ந்தவர்கள் நினைத்தார்கள். மயிலாடுதுறையைச்சேர்ந்த நாம் தமிழர் கட்சியினர் இந்த கண்ணியமான பேச்சிற்கு என்னை பொறுக்கி என்றும், பொய் ஆசிரியர் என்றும், உ.பி 200 என்றும் , இன்னும் ஆபாசமான சொற்களை பயன்படுத்தி என்னை அவதூறாக எழுதினார்கள். அவ்வாறு எழுதி முகநூல் பதிவில் நாம் தமிழர் கட்சியில் மாவட்ட தலைவராக உள்ள காளிதாசன், கட்சி பொறுப்பில் உள்ள சந்திரகுமார் மற்றும் மணிகண்டன் உள்ளிட்டவர்கள் தங்களுடைய கைப்பேசியில் உள்ள முகநூலில் பதிவிட்டிருந்தனர். மேற்படி அவர்கள் முகநூலில் வெளியிட்டிருந்தது முழுக்க முழுக்க என்னை அவதூறு செய்யும் நோக்கத்துடன் செய்திருந்தார்கள். சில பதிவுகளை பதிவிட்டு விட்டு அவரசமாக நீக்கவும் செய்தார்கள். நான் மேற்படி பதிவுகளில் ஸ்கீரின்

சாட் செய்ய முடிந்ததை மட்டுமே எடுத்து புகாருடன் போலிசாரிடம் கொடுத்துள்ளேன். நான் 33 ஆண்டுகள் பேராசிரியராக இருந்துள்ளேன். என்னுடைய மேற்பார்வையில் பலர் PHD பெற்றுள்ளார்கள். என்னிடம் படித்தவர்கள் காவல் துறை உயர் அதிகாரிகள், நீதித்துறையிலும், பல துறைகளில் பேராசிரியராகவும், நிர்வாகிகளாகவும் உள்ளனர். நான் சூழழியல், அரசியல், சமூகம் சார்ந்து 12 பெரிய நூல்களும், ஏராளமான சிறு நூல்களும் எழுதி உள்ளேன். மிக நேர்மையான பேராசிரியர் என்று கல்லுாரியல் பெயர் எடுத்தேன். இந்நிலையில் கடந்த 26.09.2021 அன்று மதியம் 12.15 மணி அளவில் எங்கள் அமைப்பை சேர்ந்த தோழர் செல்வரசனிடம் இருந்து எனக்கு பதற்றத்தோடு ஒரு போன் வந்தது. அதில் மதியம் 12.00 மணி அளவில் நாம் தமிழர் கட்சியின் மாவட்ட தலைவர் சந்திரகுமார், மணிகண்டன் உள்ளிட்டவர்கள் ஐயாறப்பர் மேலவீதி, ஜெனிபர் இனிப்பகத்திற்கு பக்கத்தில் உள்ள அவருடைய கடலை கடைக்கு வந்து ஆபாசமாக பேசி கொலை மிரட்டல் விடுத்து, உங்களுடைய பேராசிரியரை என்ன செய்கிறோம் பார் என்று கூறிவிட்டு, அவர்களுடைய இருசக்கர வாகனங்களில் வேகமாக புறப்பட்டு என்னுடைய வீடு இருக்கும் திசை நோக்கி சென்றுள்ளதாக என்னிடம் கூறினார். மேற்படி செய்திகளை அவர் பதற்றத்துடன் கூறி என்னை ஜாக்கிரதையாக இருக்கச்சொன்னார். செல்வரசன் குரலில் இருந்த பதற்றத்தை என்னால் உணர முடிந்தது. அவரிடம் நீ காவல்நிலையம் வந்து விடு என்று கூறினேன். என்னுடன் வந்த எனது மனைவியிடம் மேற்படி விசயத்தை கூறினேன். அவர் எங்களது வீட்டிற்கு போன் செய்து வீட்டில் இருந்த தம்பி மகளிடம் வீட்டை பூட்டிக்கொண்டு பத்திரமாக இருக்கும் படி சொன்னார். யார் வந்தாலும் கதவை திறக்காதீர்கள் என்று கூறினார். நான் நேரடியாக மயிலாடுதுறை காவல்நிலையத்திற்கு சென்று விட்டேன், செல்வரசனையும் காவல்நிலையத்திற்கு வரச்சொல்லி இருந்தேன். அவரும் வந்திருந்தார். நான் புகாரினை எழுதிய போது மேற்படி எதிரிகள் பயன்படுத்திய ஆபாசமான வார்த்தைகளை செல்வரசன் சொல்ல முடியவில்லை என்று சொன்னார். அவரால் குறிப்பிட முடிந்த சொற்களை மட்டுமே புகாரில் எழுதினேன்.தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகாரினை காவல்நிலையத்திற்கு அருகில் இருந்த கணிணியகத்தில் நான் சொல்லிதான் தட்டச்சு செய்யப்பட்டது. **(புகார் மனு அ.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது)** நான் புகார் கொடுக்கும் போதே முகநூலில் எதிரிகள் பதிவிட்டிருந்த பதிவுகளை நான் செல்வரசன் மொபைலில் முகநூலில் வந்திருந்த ஸ்கிரீன் சாட் டுகளை நகல் எடுத்து 1 முதல் 18 வரை உள்ள பதிவுகளையும் சேர்த்து தான் போலிசாரிடம் கொடுத்திருந்தேன். **(1 முதல் 18 வரை உள்ளமுகநூல் பதிவுகளின் ஸ்கிரீன் சாட் நகல்கள் அ.சா.ஆ.2. ஆக குறியீடு செய்யப்படுகிறது)( எந்த சாதனத்தில் இருந்து எடுக்கப்பட்டது என்பதற்கு இந்திய சாட்சிய சட்ட பிரிவு 65-B சான்றிதழ்**

**தாக்கல் செய்யாததாலும், எதிரிகளின் சட்டப்பூர்வ IDயில் இருந்து எடுக்கப்பட்டது என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்பதாலும் மேற்படி ஆவணம் நகல்கள் என்பதாலும் எதிரிகள் தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி எதிரிகள் முகநூலில் மேற்கண்டவாறு பதிவிட்டிருந்தது எனக்கு மிருந்த அவமானத்தையும், மரியாதை குறைவையும் ஏற்படுத்தியது. நாங்கள் புகார் கொடுத்தது தெரிந்தவுடன் எதிரிகளும் புகாரினை மயிலாடுதுறை காவல்நிலையத்தில் கொடுத்தார்கள் என்பதை கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரணை செய்தாரகள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பந்தமாக புகாரை எந்த தேதியில் எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்றால் 26.09.2021 ம் தேதி மதியம் சுமார் 01.00 மணிக்கு கொடுத்தேன். நான் மீத்தேன் திட்ட எதிர்ப்பு கூட்டமைப்பில் ஒருங்கிணைப்பாளராக இருந்து வருகிறேன் என்றால் சரிதான். செல்வரசனின் கடைக்கு வந்து எதிரிகள் தகராறு செய்ததாக முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். செல்வஅரசன் என்பவர் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளரை பற்றி தரக்குறைவாக பேசி சமூக வலைதளத்தில் பதிவிட்டதால் அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அந்தவழக்கானது நாங்கள் புகார் கொடுத்ததால் அதற்காக எங்கள் மீது பொய் வழக்கு போடப்பட்டது. அதுபோல் வலைதளத்தில் அவதூறாக அவர் எழுதவில்லை. செல்வஅரசன் கடையின் வாசலில் சிசிடிவி கேமரா உள்ளது என்றால் சரிதான். பொதுவாக வைக்கப்பட்டுள்ளது. சிசிடிவி கேமரா பதிவுகளை போலிசார் கைப்பற்றி விசாரித்தார்களா என்றால் கைப்பற்றியதை பற்றி செல்வரசனும்,காவல் நிலையத்திலும் என்னிடம் சொன்னார்கள். 5வது எதிரி காளிதாஸ் எனது மாணவர் என்றால் அவர் வேறு ஒரு துறையில் பயின்று வந்தவர் அந்த வகையில் அவர் பயின்ற துறைக்கும், நான் வகுப்பு எடுத்துள்ள வகையில் எனது மாணவர் ஆவார். தனிப்பட்ட முறையில் எதிரிகள் யாரேனும் உங்களை நேரடியாகவோ அல்லது போன் மூலமாகவோ தொடர்பு கொண்டு என்னை அவதூறாக பேசி கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் மணிகண்டன் என்பவரும் சேர்ந்து வந்து செல்வஅரசனின் கடையில் தகராறு செய்ததாக சொல்லி உள்ளேன் அவரை பற்றி புகாரில் நான் சொல்லியிருந்தேனா என்றால் முதல் விசாரணையில் பெயரை நான் தவறுதலாக சொல்லி உள்ளேன். புகார் கொடுத்ததற்கு பிறகு என்னை காவல் ஆய்வாளர் எந்த தேதியில், எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் விசாரித்தார்கள்,கூடுதலாக நான் ஆர்டிஓ ஆபிசிற்கு சென்றிருந்தபோது என்னை அழைத்து விசாரித்தார்கள். தற்போது சமூகவலைதளங்களில் பலர் போலியான ID களை பயன்படுத்திவருகிறார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை.

எதிரிகள் சமூகவலைதளங்களில் என்னை பற்றி அவதூறாக பேசி வருவதை வழக்கமாக கொண்டுள்ளார்கள். எதிரிகள் என்னை பற்றி சமூகவலைதளங்களில் அவதூறாக பேசி உள்ளார்கள் என்று கூறியுள்ள நிலையில் அவர்கள் மீது ஏதேனும் அவதூறு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னை பற்றி அவதூறாக பேசினார்கள் என்று சமூகவலைதளங்களில் வந்த விபரங்களை எனக்கு யார் எடுத்துக்கொடுத்தார்கள் என்றால் செல்வரசனும் எனது மனைவி மற்றும் எனது நெருங்கிய நண்பர்கள் எடுத்துக்கொடுத்தார்கள். மேற்படி சமூகவலைதளமான முகநூலில் பதிவிட்ட விபரங்கள் எதிரிகளுடையது என்பதை ஆதாரப்பூர்வமாக நிரூபிக்க ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது பெயர் ஜெயராமன் மட்டும் தான் என்றால் சரிதான். பேராசிரியர் என்பது எனது பதவி ஆகும். வழக்கில் பாதிக்கப்பட்டதாக செல்வஅரசன் தனிப்பட்ட புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்பதால் தான் அவர் தனிப்பட்ட புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, அவரை மிரட்டியதால் முக்கியமாக அவர் சார்பாகவும் தான் நான் இந்த புகாரை கொடுதுள்ளேன். புகார் கொடுத்த சமயத்தில் செல்வஅரசன் என்னுடன் இருந்தாரா என்றால் இருந்தார். செல்போனில் உள்ள வலைதளத்தில் இருந்து பதிவுகள் எடுக்கப்பட்டது என்பதையும் காட்டுவதற்காகவும் யாருடைய செல்போனில் இருந்து பெறப்பட்டது என்பதற்கும், 65–பி சான்றிதழ் பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த செல்போனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். வழக்கு சம்வத்திற்கு முன்பு நடைபெற்ற போராட்டங்களில் 5வது எதிரி என்னுடன் பங்கேற்றார் என்றால் சரியல்ல. ஆர்ப்பாட்டங்களில் மட்டும் கலந்து கொள்வார். மீத்தேன் திட்ட எதிர்ப்பு கூட்டமைப்பில் அவர் உறுப்பினர் இல்லை. நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளரை நான் விமர்சித்ததற்காகவும் என்மீது புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. செல்வஅரசனுக்கு எதிரிகள் மீதுள்ள தனிப்பட்ட முன் விரோதத்தினால் எனது மூலமாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் ஒரு சமுதாய சேவகர் என்பதாலும் நான் புகார் கொடுத்தால் தான் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்படும் என்பதை பயன்படுத்தி பொய்யான தகவலை என்னிடம் கூறி புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த விதமான சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. 5வது எதிரி மீது உள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அவர்தான் இந்த வழக்கு சம்பவத்தை தூண்டினார் என்று அவர் மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

என்னால் எடுத்துக்கொள்ளப்பட்டது
என் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்
காட்டப்பட்டு இவைகள் சரியென்று
ஏற்கப்பட்டது

3/3/26

நீதித்துறை நடுவர் எண் 1
மயிலாடுதுறை